### உப்பங்கழி (Lagoon) :

கடலிலிருந்து உப்புநீர் தனியாகப் பிரிந்து ஆழம் குறைவான நிலப்பகுதியில் சேர்ந்து உருவாகும் நீர்ப்பரப்பு உப்பங்கழி ஆகும்.

உதாரணம்: ஒடிசாவில் உள்ள சிலிக்கா ஏரி

### நீர்ச்சந்தி (Strait) :

இரண்டு மிகப்பெரிய நீர்ப்பரப்புகளை இணைக்கும் குறுகிய நீர்ப்பரப்பை **நீர்ச்சந்தி** என்கிறோம்.

உதாரணம்: பாக் நீர்ச்சந்தி, இது வங்காள விரிகுடாவையும், இந்தியப் பெருங்கடலையும் இணைக்கிறது.

### அருவி (Waterfall) :

நதி நீரானது உயரமான பகுதிகளில் இருந்து கீழே விழும்பொழுது, **அருவி** உருவாகிறது.

உதாரணம்: குற்றாலம் அருவி

குற்றாலம் அருவி








5th Social Science Term II Unit 2 TM.indd 118 8/20/2019 2:29:40 PM

தண்ணீரை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நீர்வளங்களைப் பாதுகாப்பதும் அல்லது அவற்றை மேலும் மாசுபடுத்துவதும் நம் கையில்தான் உள்ளது. நீர் மாசுபடுதல் என்பது நம்மை சுற்றிக் காணப்படும் பொதுவான நிகழ்வாகும். குப்பைகளை நீராதாரங்களில் கொட்டுவதாலும் , கழிவு நீரை ஆற்றில் கலக்க விடுவதாலும் ஆற்றுநீர் மாசுபட்டு நம்மால் பயன்படுத்த முடியாதவாறு உள்ளது. இதனால் நமக்கு நீர் பற்றாக்குறை ஏற்படுகிறது.



இராணி: ஓ ! தண்ணீர் பற்றாக்குறை!

சுந்தர்: நாம்கூட இதனை எதிர்கொள்கிறோம்.

இராணி: நீ கூறுவது சரி. நீரைச் சரியான முறையில் பயன்படுத்தக்கூடிய வழிகளைப் பின்பற்றினால் இப்பிரச்சினைக்குத் தீர்வு வரும் என நான் எண்ணுகின்றேன்.

குழந்தைகளே உங்களால் இந்த வழிமுறைகளை எளிதில் பின்பற்ற முடியும்.

- தூவாலை குழாயைப் (Shower) பயன்படுத்திக் குளிப்பதைக் குறைத்துக்கொண்டு வாளியில் தண்ணீர் எடுத்துப் பயன்படுத்த வேண்டும்.
- பாத்திரங்களைக் கழுவியபின், குழாய்கள் மூடப்பட்டுள்ளனவா என்பதனைக் கவனிக்க வேண்டும்.

இவைபோன்ற வேறு எவையேனும் வழிமுறைகளைக் கூறி இராணிக்கு உதவமுடியுமா?



5th Social Science Term II Unit 2 TM.indd 119 8/20/2019 2:29:41 PM

**சிந்தனை செய்**



நாம் எவ்வாறு நீரைச் சேமிக்கலாம்?



நெகிழி குப்பைகளைக் கடற்கரை ஓரங்களில் போடக்கூடாது . இது கடல்வாழ் உயிரினங்களுக்கு ஆபத்தை விளைவிக்கும்.

**சுந்தர்:** இராணி, உனக்குத் தெரியுமா? நீர் தொடர்ந்து பூமிக்கு மேலேயும், கீழேயும் மற்றும் பூமியின் மேற்பரப்பிலும் சுழன்று கொண்டே இருக்கும்.





**இராணி:** அப்படியா! எப்படி?

**சுந்தர்:** நீர் சுழற்சியின் மூலம் இந்நிகழ்வு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கும். நீரானது திண்மம், நீர்மம் மற்றும் வாயு ஆகிய மூன்று நிலைகளில் மாறிக்கொண்டே இருக்கும்.



## முழுமையான நீர்சுழற்சியின் நிலைகள்

### முதல் நிலை : ஆவியாதல் (Evaporation)

சூரிய ஒளி, நீர்ப்பரப்புகளான பெருங்கடல்கள், கடல்கள், ஏரிகள் போன்றவற்றின் மேல் விழுவதால், நீர் மெதுவாக ஆவியாகிக் (Evaporate) காற்றில் கலக்கிறது.

### இரண்டாம் நிலை : ஆவி சுருங்குதல் (Condensation)

நீர் ஆவியாகி மேலே செல்லும்பொழுது குளிரான வெப்பநிலை, அவற்றைத் குளிர்வித்து மீண்டும் நீர்மமாக மாற்றுகிறது. இதுவே ஆவிசுருங்குதல் எனப்படுகிறது. காற்றானது இந்த நீர்மத்தைச் சுழற்றுவதால் மேகங்கள் உருவாகின்றன.



5th Social Science Term II Unit 2 TM.indd 120 8/20/2019 2:29:42 PM

### மூன்றாம் நிலை : மழைப்பொழிவு (Precipitation)

காற்றின் இயக்கத்தால் மேகங்கள் ஒன்றுடன் ஒன்று மோதுகின்றன.அவை மழைபொழியும் மேகங்களாக மாறி, மழையாக மீண்டும் பூமியின் மேற்பரப்பை வந்தடைகிறது. இந்தச் செயல்முறை, மழைப்பொழிவு என்று கூறப்படுகிறது. இம் மழைப்பொழிவானது தட்ப வெப்ப நிலையைப் பொருத்து மழையாகவோ, ஆலங்கட்டி மழையாகவோ, பனிப்பொழிவாகவோ, பனித்துளியாகவோ இருக்கக்கூடும்.

### நான்காம்.நிலை : வழிந்தோடுதல் மற்றும் உறிஞ்சப்படுதல். (Runoff and Infiltration)

நீரானது பெருங்கடல்கள், ஆறுகள் அல்லது நிலமேற்பரப்பில் வழிந்தோடுகிறது அல்லது மண்ணால் உறிஞ்சப்படுகிறது. இச் சுழற்சி தொடர்ந்து நடைபெறுகிறது.

## கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| Continent | : | கண்டம் |
| Evaporate | : | ஆவியாதல் |
| Precipitation | : | மழைப்பொழிவு |





## மீள்பார்வை

- பூமியானது நிலம், நீர் மற்றும் காற்றால் உருவாகியுள்ளது.
- நீரானது அனைத்து உயிரிகளுக்கும் தேவைப்படுகிறது.
- 3% நீர், நிலத்தடியில், ஏரிகள், குளங்கள், நீரோடைகள் மற்றும் ஆறுகளில் காணப்படுகிறது.
- பூமியில் ஐந்து பெருங்கடல்கள் உள்ளன. அவை பசிபிக் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல், இந்தியப் பெருங்கடல், தென் பெருங்கடல், ஆர்டிக் பெருங்கடல்.
- நதிநீரானது உயரமான இடத்திலிருந்து விழும்பொழுது அருவி உருவாகிறது.
- நாம் தண்ணீரைச் சிக்கனமாக பயன்படுத்தவேண்டும்.



5th Social Science Term II Unit 2 TM.indd 121 8/20/2019 2:29:43 PM



# மதிப்பீடு



C7B1W2

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1) நீர்க்கோளம் என்பது, பூமியின் மேற்பரப்பில் உள்ள மொத்த ______________ அளவைக் குறிக்கும்.

அ) காற்று ஆ) நீர்

இ) நிலம் ஈ) தாவரங்கள்

2) பொருந்தாதவற்றைக் கண்டுபிடி.

அ) கங்கை ஆ) அட்லாண்டிக் இ) ஆர்டிக் ஈ) பசிபிக்

3) நீர்ப்பரப்பின் அனைத்துப் பக்கங்களும் நிலத்தால் சூழப்பட்டிருந்தால் ______________ என அழைக்கப்படுகிறது.

அ) ஆறு ஆ) வளைகுடா இ) ஏரி ஈ) விரிகுடா

4) ஆவியாதல் என்பது, நீர்சுழற்சியின் ______________ படிநிலை.

அ) முதல் ஆ) இரண்டாம் இ) மூன்றாம் ஈ) நான்காம்

5) ஒரு நீர்ப்பரப்பின் ஒரு பகுதியை நிலம் சூழ்ந்திருந்து, மற்றப் பகுதிகள் கடலை நோக்கி இருந்தால் ______________ எனப்படும்.

அ) கடல் ஆ) நீர்ச்சந்தி இ) விரிகுடா ஈ) குளம்

## II. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1 | நன்னீர் | சம்பார் ஏரி |
| 2 | உப்பங்கழி | பாக்நீர்ச்சந்தி |
| 3 | இந்தியப் பெருங்கடலையும், வங்காள விரிகுடாவையும் இணைக்கிறது | மேகங்கள் உருவாதல் |
| 4 | உள்நாட்டு உப்பு ஏரி | ஒடிசாவில் உள்ள சிலிகா |
| 5 | ஆவிசுருங்குதல் | தால் ஏரி |

## III. சரியா / தவறா எழுதுக.

1. பூமியில் 97% நீர் உப்பாக உள்ளது. (          )

2. நமது அன்றாடத் தேவைகளுக்கு நீர் தேவை இல்லை. (          )



5th Social Science Term II Unit 2 TM.indd 122 8/20/2019 2:29:46 PM

3. கடல்நீர் இனிப்பாக இருக்கும். (            )

4. நாம் பாத்திரங்களைக் கழுவி முடிக்கும் வரையில் குழாயைத் திறந்து வைத்துக்கொண்டே இருக்க வேண்டும். (            )

5) நாம் தண்ணீரைச் சேமிக்க வேண்டும். (            )

**IV. பின்வருவனவற்றிற்கு விடையளிக்க.**

1. நீர்க்கோளம் வரையறு.
2. நீர்க்கோளம் முக்கியமானது. ஏன்?
3. பல்வேறு வகையான நீர்ப்பரப்புகளின் பெயர்களை எழுதுக.

**V. விரிவான விடையளிக்க.**

1. நீர் சுழற்சியின் படிநிலைகள் யாவை?
2. நீரைச் சேகரிக்க உதவும் வழிமுறைகளுள் சிலவற்றைக் கூறுக.

செயல்பாடு

## செயல் திட்டம்

**நீர்நிலைகளின் படங்களைச் சேகரித்து, ஒவ்வொன்றையும் பற்றி ஒரு வாக்கியத்தை எழுதுக.**



5th Social Science Term II Unit 2 TM.indd 123 8/20/2019 2:29:47 PM

அலகு

3

# உலகில் உள்ள கண்டங்கள்

## கற்றல் நோக்கங்கள்



மாணவர்கள் இப்பாடத்தைக் கற்பதன் வாயிலாக,

❖ ஒவ்வொரு கண்டத்தின் சிறப்பு அம்சங்களை விவரிப்பர்.

❖ ஒவ்வொரு கண்டத்திலும் உள்ள சில நாடுகள் பற்றி விவரிப்பர்.

C9E4A8

## அறிமுகம்

நாம் எங்கு வாழ்கிறோம்? நாம் அனைவரும் பூமியில் வாழ்கிறோம். பூமிதான் நமது வீடு. பூமியின் மொத்த நிலப்பரப்பும் ஏழு கண்டங்களாகப் பல்வேறு அளவுகளில் பிரிந்துள்ளன. இவற்றில் சில கண்டங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ளன. மற்றவை இணையாமல் தனிப்பட்ட கண்டங்களாக விளங்குகின்றன. ஒவ்வொரு கண்டமும் வெவ்வேறு எண்ணிக்கையிலான நாடுகளைக் கொண்டுள்ளன. உலகத்திலுள்ள ஏழு கண்டங்களாவன: **ஆசியா, ஆப்பிரிக்கா, வடஅமெரிக்கா, தென் அமெரிக்கா, அண்டார்டிகா, ஐரோப்பா** மற்றும் **ஆஸ்திரேலியா.**



5th Social Science Term II Unit 3 TM.indd 124 21-08-2019 13:51:13


உலக வரைபடம்
ஆர்டிக் பெருங்கடல்
வ
மே
கி
தெ
வட அமெரிக்கா
ஐரோப்பா
ஆசியா
அட்லாண்டிக் பெருங்கடல்
பசிபிக் பெருங்கடல்
ஆப்பிரிக்கா
பசிபிக் பெருங்கடல்
தென் அமெரிக்கா
இந்தியப் பெருங்கடல்
ஆஸ்திரேலியா
X3G3I3
வரைபடம் அளவையில் இல்லை
தென் பெருங்கடல்
அண்டார்டிகா

# ஆசியா

உலகத்திலுள்ள கண்டங்களுள் ஆசியாதான் மிகப்பெரிய நிலப்பரப்பினையும், மிகுந்த மக்கள் தொகையினையும் கொண்டுள்ள கண்டமாகும். உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடுகளான **சீனாவும், இந்தியாவும்** ஆசியாவில்தான் உள்ளன. பூமியின் மிக உயர்ந்த இடமான, இமயமலையில் உள்ள எவரெஸ்ட சிகரம் ஆசியாவில்தான் உள்ளது. பண்டைய நாகரிகங்களான (Civilisation) சிந்துவெளி நாகரிகம், சீன நாகரிகம், மெசபடோமியா நாகரிகம் போன்றவை ஆசியாவில் தான் தோன்றியுள்ளன.

இமயமலை



சீனப்பெருஞ்சுவர்





மனிதனால் கட்டப்பட்ட **சீனப்பெருஞ்சுவரை** விண்வெளியில் இருந்துகூடக் காண முடியும்.

நாம் அறிந்து கொள்வோம்.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் இந்த ஏழு கண்டங்களும் இணைந்து இருந்தது. பெரிய நிலப்பரப்பாக இருந்த அந்நிலப்பரப்பு **பாஞ்சியா** என்று அழைக்கப்பட்டது. ஆனால், மெல்ல மெல்ல அந்நிலப்பரப்பு உடைந்து, ஏழு கண்டங்களாகப் பிரிந்தது.

ஆசியாவில் உள்ள மற்ற சில நாடுகள்: **ஜப்பான், சிங்கப்பூர், மலேசியா, சவுதி அரேபியா, ஸ்ரீலங்கா, நேபாளம், பாகிஸ்தான், மாலத்தீவு, பிலிப்பைன்ஸ், ஆப்கானிஸ்தான், தாய்லாந்து** மற்றும் **இந்தோனேசியா.** தற்பொழுது நாம் ஆசியாவின் ஒரு பகுதியாக விளங்கும் நமது நாட்டைப் பற்றிக் கற்போம்.



5th Social Science Term II Unit 3 TM.indd 126 21-08-2019 13:51:15

# இந்தியா

நமது நாடு இந்தியா. **வேற்றுமையில் ஒற்றுமை** கொண்ட நாடாக இந்தியா அறியப்படுகிறது. ஏனெனில், மக்கள் வெவ்வேறு மதங்களையும், மொழிகளையும் கலாச்சாரங்களையும் கொண்டு ஒற்றுமையாக வாழ்கின்றனர். இந்தியாவில் 29 மாநிலங்களும், 7 யூனியன் பிரதேசங்களும் உள்ளன. **புதுதில்லி** இந்தியாவின் தலைநகரமாக விளங்குகிறது. இந்தியாவில் பல நினைவுச் சின்னங்கள் உள்ளன. **தாஜ்மஹால்** ஒரு நினைவுச் சின்னம் ஆகும். இது ஆக்ராவில் யமுனை நதிக்கரையில் அமைந்துள்ளது. தாஜ்மஹால் வெள்ளைப் பளிங்குக் கற்களைக் கொண்டு கட்டப்பட்டடுள்ளது. இந்த அழகான நினைவுச் சின்னமானது (Monument) உலகத்தில் உள்ள ஏழு அதிசயங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது.

தாஜ்மஹால்



சாஞ்சி ஸ்தூபி



கங்கைகொண்ட சோழபுரம்



புனித ஜார்ஜ்கோட்டை





5th Social Science Term II Unit 3 TM.indd 127 21-08-2019 13:51:17

இந்தியாவில் உள்ள மேலும் சில வரலாற்று நினைவுச்சின்னங்களாவன, புதுதில்லியில் உள்ள **இந்தியாவின் வாயில்,** மும்பையிலுள்ள **இந்தியாவின் நுழைவாயில்,** போபால் அருகே உள்ள **சாஞ்சி ஸ்தூபி,** தமிழ்நாட்டில் உள்ள **புனித ஜார்ஜ்கோட்டை** மற்றும் **கங்கைகொண்ட சோழபுரம்.**

இந்தியாவின் நுழைவாயில்



இந்தியாவின் வாயில்



### செயல்பாடு

நாம் செய்வோம்.

உலகத்திலுள்ள ஏழு அதிசயங்களின் படங்களைத் தொகுத்து ஒட்டவும்.



5th Social Science Term II Unit 3 TM.indd 128 21-08-2019 13:51:19

# ஆப்பிரிக்கா

உலக கண்டங்களில் இரண்டாவது பெரிய நிலப்பரப்பினைக் கொண்ட கண்டம் **ஆப்பிரிக்கா** ஆகும். உலகின் மிக நீளமான நதியான **நைல் நதியும்**, உலகின் மிகப் பெரிய பாலைவனமான **சகாராப் பாலைவனமும்** ஆப்பிரிக்காவில்தான் உள்ளன. உலகிலேயே 50% மேல் தங்கம், வைரம் ஆகியவை கனிம வளம் மிக்க ஆப்பிரிக்க கண்டத்தில் இருந்துதான் கிடைக்கின்றன.


சகாராப் பாலைவனம்




நைல் நதி



**சிந்தனை செய்**




சுத்தமான நதி



அசுத்தமான நதி





5th Social Science Term II Unit 3 TM.indd 129 21-08-2019 13:51:20

நாம் அறிந்து கொள்வோம்.

பல்லாயிரக்கணக்கான வருடங்களாக அறியப்படாமல் இருந்ததாலும், மக்கள் வசிக்க ஏற்ற சூழ்நிலை இல்லாததாலும் ஆப்பிரிக்கா கண்டம் **இருண்ட கண்டம்** என அழைக்கப்பட காரணமாயிற்று.

ஆப்பிரிக்காவில் உள்ள சில நாடுகள்: **சூடான், லிபியா, எகிப்து, கென்யா, ஜிம்பாப்வே, எத்தியோப்பியா மற்றும் கினியா.**

# வடஅமெரிக்கா

வடஅமெரிக்கா முழுவதும் வட கோளத்தில் உள்ளது. ஆசியா, ஆப்பிரிக்காவைத் தொடர்ந்து வடஅமெரிக்கா மூன்றாவது மிகப்பெரிய நிலப்பரப்பினைக் கொண்டுள்ளது. மிகப்பெரிய நன்னீர் ஏரியான **சுப்பீரியர் ஏரி** (Lake Superior) இக்கண்டத்தில்தான் உள்ளது. **மிசிசிப்பி – மிசௌரி நதி** வடஅமெரிக்காவின் நீளமான நதிகளுள் ஒன்று. **அமெரிக்க ஐக்கிய நாடுகள்** வடஅமெரிக்கவின் ஒரு பகுதியாகும்.

**நியூ யார்க் (அ.ஐ.நா)**



**ஒட்டாவா, கனடா**





5th Social Science Term II Unit 3 TM.indd 130 21-08-2019 13:51:20

**நாம் அறிந்து கொள்வோம்.**

உலகின் அனைத்து வகையான **காலநிலைகளையும்** கொண்ட ஒரே கண்டம் **வடஅமெரிக்கா** ஆகும்.

வடஅமெரிக்காவில் உள்ள சில நாடுகள்: **கனடா, மெக்ஸிகோ, நிக்காரகுவா, ஹோண்டுராஸ், கியூபா, குவாத்தமாலா, பனாமா** மற்றும் **கோஸ்ட்டா ரிக்கா.**

# தென்அமெரிக்கா

தென்அமெரிக்காவின் பெரும்பாலான பகுதிகள் தென் அரைக்கோளத்திலும், சிறிய பகுதி வடஅரைக்கோளத்திலும் அமைந்துள்ளன. உலகின் மிகப் பரந்த மற்றும் இரண்டாவது நீளமான நதியான **அமேசான் நதி** தென் அமெரிக்காவில்தான் உள்ளது. தென்அமெரிக்காவில் உள்ள **பிரேசில் நாடு** அதிக அளவில் காபி உற்பத்தி செய்யும் நாடுகளுள் ஒன்று. தென் அமெரிக்காவின் **ஆண்டிஸ் மலைத்தொடர்** மிக நீண்ட மலைத்தொடர்களுள் ஒன்று. இது ஒரு மடிப்பு மலை ஆகும். **அகோன்காகுவா** ஆண்டிஸ் மலைத்தொடரின் மிக உயர்ந்த சிகரம் ஆகும். உலகின் மிக உயர்ந்த எரிமலைகளுள் ஒன்றான **கொடோபாக்சி எரிமலை** இக்கண்டத்தில் காணப்படுகிறது.



**அமேசான் மழைக்காடுகள்** என்பவை, தென்அமெரிக்காவின் அமேசான் ஆற்றுப்படுகையில் அமைந்துள்ள பெரிய மழைக்காடு ஆகும்.

**ஆண்டிஸ் மலைத்தொடர்**



**கொடோபாக்சி எரிமலை**



தென்அமெரிக்காவில் உள்ள சில நாடுகள்: **அர்ஜென்டினா, பொலிவியா, பிரேசில், கொலம்பியா, ஈக்குவெடார், பாரகுவே, பெரு, உருகுவே** மற்றும் **வெனிசுலா.**

**செயல்பாடு**

நாம் செய்வோம்.

- **நாட்டின் பெயர் மற்றும் அது எக்கண்டத்தில் இடம்பெற்றுள்ளது என்பதனைக் கீழுள்ள அட்டவணையில் எழுதுக.**

| வ.எண் | நாடு | கண்டம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

# அண்டார்டிகா

அண்டார்டிகா, பூமியின் மிகவும் குளிர்ந்த கண்டம் ஆகும். இக்கண்டம் **வெள்ளைக்கண்டம்** அல்லது **உறைந்த கண்டம்** எனவும் அழைக்கப்படுகிறது. அண்டார்டிகாவில் அரை வருடம் சூரிய வெளிச்சமும், அரை வருடம் இருளாகவும் இருக்கும். **பென்குவின்கள்** அண்டார்டிகாவில் காணப்படுகின்றன. அங்கு வெவ்வேறு உலக நாடுகளின் ஆய்வுக்கூடங்கள் மட்டுமே காணப்படுகின்றன.

**அண்டார்டிகாவில் காணப்படும் பென்குவின்கள்**



# ஐரோப்பா

ஐரோப்பாவும், ஆசியாவும் பெரிய நிலப்பரப்பின் பகுதிகளாக உள்ளன. **யூரல் மலைத்தொடர்களும், காஸ்பியன் கடலும்** ஆசியாவிலிருந்து ஐரோப்பாவைப் பிரிக்கின்றன. உலகின் மிகச் சிறிய நகரமான **வாடிகன் நகரம்** ஐரோப்பாவில்தான் உள்ளது. **வோல்கா நதி** ஐரோப்பாவின் மிக நீளமான நதிகளுள் ஒன்று ஆகும்.

**நாம் அறிந்து கொள்வோம்.**

ஐரோப்பாவில் உள்ள **பின்லாந்து, ஏரிகளின் நிலம்** என்று அழைக்கப்படுகிறது, ஏனெனில், பனிக்கட்டிகள் உருகி இங்கு நிறைய ஏரிகளை உருவாக்கியுள்ளன.



5th Social Science Term II Unit 3 TM.indd 133 21-08-2019 13:51:21

ஐரோப்பாவில் உள்ள சில நாடுகள்: **பிரான்ஸ், ஸ்பெயின், ஐக்கிய அரசு, ஜெர்மனி, நார்வே, ஆஸ்திரியா, கிரீஸ், போர்ச்சுகல் மற்றும் இத்தாலி.**

X5J5W9

**வாடிகன் நகரம் ( இத்தாலி)**



**இலண்டன் (இங்கிலாந்து)**



**நாம் அறிந்து கொள்வோம்.**

**இரஷ்யா நாடு** கிழக்கு ஐரோப்பா மற்றும் வட ஆசியாவில் பரந்து விரிந்துள்ளது.



உக்ரைனின் ஸ்டெப்பி புல்வெளி பகுதி **ஐரோப்பாவின் ரொட்டிக் கூடை** என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில், இங்கு அதிக அளவு கோதுமை உற்பத்தி செய்யப்படுகிறது.

**சிந்தனை செய்**



இந்தியாவில் உள்ள எந்த மாநிலம் **இந்தியாவின் ரொட்டிக்கூடை** என்று அழைக்கப்படுகிறது?



5th Social Science Term II Unit 3 TM.indd 134 21-08-2019 13:51:22

# ஆஸ்திரேலியா

ஆஸ்திரேலியா, ஒரு தீவுக் (Island) கண்டமாகும். தனித்துவம் பெற்ற இயற்கைக் காட்சிகளும் இயற்கை அதிசயங்களும் கொண்ட கண்டமாகும். **பெருந்தடுப்புப் பவளப்பாறைத் திட்டுகள்** (The Great Barrier Reef) ஆஸ்திரேலியாவின் பெருமைகளுள் ஒன்று. ஏறக்குறைய 2,500 தனிப்பட்ட பவளப்பாறைகளால் ஆனது. இவற்றை விண்வெளியில் இருந்துகூடக் காணலாம். ஆஸ்திரேலியா **டாஸ்மேனியா** மற்றும் **பலத் தீவுகளை** உள்ளடக்கியது.

**பெருந் தடுப்புப் பவளப்பாறை**



**கங்காரு**



## கலைச்சொற்கள்

| | |
|---|---|
| Civilisation | : நாகரிகம் |
| Island | : தீவு |
| Monument | : நினைவுச் சின்னம் |





## மீள்பார்வை

- பூமியில் ஏழு கண்டங்கள் காணப்படுகின்றன. இந்த ஏழு கண்டங்களும் நாடுகளாகப் பிரிந்துள்ளன.
- ஏழு கண்டங்களின் பெயர்கள்: **ஆசியா, ஆப்பிரிக்கா, வடஅமெரிக்கா, தென் அமெரிக்கா, அண்டார்டிகா, ஐரோப்பா** மற்றும் **ஆஸ்திரேலியா.**



5th Social Science Term II Unit 3 TM.indd 135 21-08-2019 13:51:23

# மதிப்பீடு

X7W4C3

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1) உலகில் ………………. கண்டங்கள் உள்ளன.
அ) ஐந்து ஆ) ஏழு இ) ஒன்பது

2) மிகப்பெரிய கண்டம்………………..
அ) ஆப்பிரிக்கா ஆ) ஆசியா இ) வடஅமெரிக்கா

3) உலகின் நீளமான நதி……………..
அ) காவிரி ஆ) கங்கை இ) நைல்

4) சுப்பீரியர் ஏரி (Lake Superior) அமைந்துள்ள கண்டம் ……………. .
அ) வட அமெரிக்கா ஆ) ஆஸ்திரேலியா இ) ஐரோப்பா

5) பென்குவின்கள் காணப்படும் இடம் …………..
அ) ஆசியா ஆ) அண்டார்ட்டிகா இ) ஆப்பிரிக்கா

## II. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1 | ஆசியா | வாடிகன் நகரம் |
| 2 | ஆப்ரிக்கா | அமேசான் காடு |
| 3 | ஐரோப்பா | சகாராப் பாலைவனம் |
| 4 | தென் அமெரிக்கா | கங்காரு |
| 5 | ஆஸ்திரேலியா | மிகப்பெரிய கண்டம். |

## III. சரியா / தவறா எழுதுக.

1. ஆசியா உலகின் மூன்றாவது பெரிய கண்டமாகும். ( )
2. உலகின் ஏழு அதிசயங்களுள் ஒன்று இந்தியாவில் உள்ளது. ( )
3. பிரேசில் அதிக அளவில் காபி உற்பத்தி செய்யும் நாடுகளுள் ஒன்று. ( )
4. பெருந் தடுப்புப் பவளப்பாறை இந்தியாவில் உள்ளது. ( )
5. அண்டார்டிகாவில் அரைவருடம் சூரிய ஒளி காணப்படும். ( )

## IV. பின்வருவனவற்றிற்கு விடையளிக்க.

1. கண்டங்களின் பெயர்களை எழுதவும்.
2. தாஜ்மஹால் எங்கு அமைந்துள்ளது?
3. வடஅமெரிக்காவின் சிறப்பு அம்சங்களைப் பற்றி எழுதுக.
4. பெருந்தடுப்புப் பவளப்பாறை எங்கு அமைந்துள்ளது?
5. எக்கண்டம் உறைபனிக் கண்டம் என்று அழைக்கப்படுகிறது?

## V. விரிவான விடையளிக்க.

1. ஏதேனும் இரு கண்டங்களைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.
2. இந்தியாவில் உள்ள நினைவுச்சின்னங்கள் பற்றி எழுதுக.
3. ஆஸ்திரேலியாவைப் பற்றி விரிவாக எழுதவும்.

செயல்பாடு

## செயல் திட்டம்

எவையேனும் ஐந்து நாடுகளின் கொடிகளை ஒட்டவும்.



5th Social Science Term II Unit 3 TM.indd 137 21-08-2019 13:51:24

# வகுப்பு V கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் (பருவம் 2, தொகுதி 2) பாடநூல் மேலாய்வாளர்கள் மற்றும் ஆசிரியர்கள்

## கல்வி ஆலோசகர்

**முனைவர் பொன். குமார்**
இணை இயக்குநர் (பாடத்திட்டம்),
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

### பாடநூல் ஒருங்கிணைப்பாளர்கள்

**முனைவர் கே. எஸ். மொழியரசி**
முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி
மற்றும் பயிற்சி நிறுவனம்.
கீழப்பழூவூர், அரியலூர் மாவட்டம்.

### பாட ஒருங்கிணைப்பாளர்

### கணிதம்

**டி. ஜோஷ்வா எடிசன்**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர்
கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்
களியாம்பூண்டி,காஞ்சிபுரம்.

**கே. ரேவதி**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர்
கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்.
பெரம்பலூர்.

### அறிவியல்

**முனைவர். க. சிந்தனையாளன்**
பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
நந்தம்பாக்கம், காஞ்சிபுரம்.

### சமூக அறிவியல்

**சா. மகேஸ்வரி**
முதுகலை ஆசிரியை,
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி,
விழுப்புரம்.

### கலை மற்றும் வடிவமைப்பு குழு

### பக்க வடிவமைப்பு

ராஜேஷ் தங்கப்பன்
கோபிநாத் ரகுபதி
சந்தியாகு ஸ்டீபன்
பூர்ண சந்திரன் தி க
சகாய அரசு. ரா
பக்கிரிசாமி அண்ணாதுரை

### In-House – QC

காமாட்சி பாலன் ஆறுமுகம்
கி. ஜெரால்டு வில்சன்
அருண் காமராஜ் பழனிசாமி

### அட்டை வடிவமைப்பு

கதிர் ஆறுமுகம்

### ஒருங்கிணைப்பு

ரமேஷ் முனிசாமி

## கணிதம்

### கூர்ந்தாய்வாளர்கள்

**முனைவர் இராமானுஜம்**
பேராசிரியர், கணித அறிவியல்
நிறுவனம், தரமணி, சென்னை.

**ஆர். கிருத்திகா**
ஆராய்ச்சி நிறுவனம்
அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழகம்,
பெங்களூரு.

### பாட நூலாசிரியர்கள்

**பி. கல்பனா**
பட்டதாரி ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
ஆலம்பாக்கம், புல்லம்பாடி
ஒன்றியம், திருச்சி.

**இரா.ஆறுமுகம்** M.sc, B.Ed,
அரசு உயர்நிலைப்பள்ளி
வீராபுரம், காஞ்சிபுரம் மாவட்டம்.

**ஜரின் மெர்லி** M.sc, B.Ed,
அரசு உயர்நிலைப்பள்ளி,
காரை, காஞ்சிபுரம் மாவட்டம்.

**இ.வாஞ்சூர் முகைதீன்** M.sc, B.Ed,
PGDC. அரசு உயர்நிலைப்பள்ளி,
வல்லிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம்.

**வித்யாதரன்,** பட்டதாரி ஆசிரியர்
ஊ.ஒ.ந.நி.பள்ளி, வெள்ளிவாயல்

**எஸ். நடராஜன்,** பட்டதாரி ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
மணகெதி, அரியலூர் (மா)

**எஸ். முத்தமிழ்ச்செல்வன்**
இடைநிலை ஆசிரியர்,
தா.பழூர்(ஒ) அரியலூர் (மா).

**எ. இளையராஜா**
இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
கோரைக்குழி, அரியலூர் (மா)

**வீ. கலையரசன்,**
இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
கவரப்பாளையம், அரியலூர் (மா)

**எஃப். விமல்ராஜா,**
பட்டதாரி ஆசிரியை,
ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்
பள்ளி,
திருக்கோயிலூர் (ஒ), விழுப்புரம் (மா)

### மொழி பெயர்ப்பாளர்கள்

வாஞ்சூர் முகைதீன்
அரசு உயர் நிலைப் பள்ளி,
வில்லிபுரம், காஞ்சிபுரம்.

## அறிவியல்

### பாட வல்லுநர் மற்றும் மேலாய்வாளர்

**முனைவர் க. சிந்தனையாளன்,**
பட்டதாரி ஆசிரியர்,
அ.உ.நி.பள்ளி, பெரியார்நகர்
நந்தம்பாக்கம், காஞ்சிபுரம்.

### நூல் ஆசிரியர்கள்

**பொ. நடராஜன்,**
பட்டதாரி ஆசிரியர்
ஊ.ஒ.ந.நி.பள்ளி,
சின்னபட்டாக்காடு, அரியலூர்.

**த. ராதாகிருஷ்ணன்,**
பட்டதாரி ஆசிரியர்
ஊ.ஒ.ந.நி.பள்ளி, வளம்பக்குடி,
தஞ்சாவூர்.

### மொழி பெயர்ப்பாளர்கள்

**ப. ரூபி பாக்கியம்,**
பட்டதாரி ஆசிரியர்
ஊ.ஒ.ந.நி.பள்ளி, பெரியகடம்பூர்
காலனி, திருத்தனி.

**முனைவர் க. சிந்தனையாளன்,**
பட்டதாரி ஆசிரியர்,
அ.உ.நி.பள்ளி, பெரியார்நகர்
நந்தம்பாக்கம், காஞ்சிபுரம்.

### விரைவுக்குறியீடு மேலாண்மைக்குழு

இரா. ஜெகநாதன்,
இ.நி.ஆ,ஊ.ஒ.ந.நி.பள்ளி,
கணேசபுரம், போளூர்,
திருவண்ணாமலை மாவட்டம்.

வ.பத்மாவதி,
பட்டதாரி ஆசிரியை,
அ.உ.நி. பள்ளி, வெற்றியூர்,
திருமானூர், அரியலூர்.

ஆ.தேவி ஜெஸிந்தா,
பட்டதாரி ஆசிரியை,
அ.உ.நி.பள்ளி, என்.எம்.கோவில்,
வேலூர்

## சமூக அறிவியல்

### கூர்ந்தாய்வாளர்

**சு. கோமதி மாணிக்கம்,**
பட்டதாரி ஆசிரியை,
அ. மே. நி. பள்ளி,
பழைய பெருங்களத்தூர்,
காஞ்சிபுரம்.

**க. வேலு,** பட்டதாரி ஆசிரியர்,
அ. ம. மே. நி. பள்ளி,
தலைவாசல்,சேலம்.

**பெ. பாலமுருகன்,**
முதுகலை ஆசிரியர்
அ.ஆ. மே. நி. பள்ளி
தம்மம்பட்டி, சேலம்

### பாட நூலாசிரியர்கள்

**சா. மகேஸ்வரி**
முதுகலை ஆசிரியை,
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி,
விழுப்புரம்.

**ஆர். சித்ரா**
பட்டதாரி ஆசிரியை,
ஈஷா.வித்யா.மெட்ரிக்.மே. நி. பள்ளி
கோயம்புத்தூர்.

**உமா மகேஸ்வரி**
பட்டதாரி ஆசிரியை,
ஈஷா.வித்யா.மெட்ரிக்.மே. நி. பள்ளி
கோயம்புத்தூர்.

இந்நூல் 80 ஜி.எஸ்.எம். எலிகண்ட் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.
ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:



5th Social Science Term II Unit 3 TM.indd 138 21-08-2019 13:51:24

குறிப்புகள்



5th Social Science Term II Unit 3 TM.indd 139 21-08-2019 13:51:24

குறிப்புகள்



5th Social Science Term II Unit 3 TM.indd 140 21-08-2019 13:51:24